நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 06 ம் நாள் சனிக்கிழமை
**குற்றவியல் பல்வகை மனு. 484/2026**

ஜான்சிராணி,
த/பெ.பாண்டியராஜ் ... மனுதாரர்/உரிமையாளர்

/எதிரிடை/

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
கிருஷ்ணன்கோவில் காவல் நிலைய
குற்ற எண்.120/2026 ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு கடந்த 01.06.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 04.06.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முத்துக்குமார், B.A, B.L, அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 திரு.P.பொன்ராஜ், M.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்து பி.ஆர்.எண்.255/2026–ல் உள்ள வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் மனுவின் சுருக்கம்–**

இம்மனுவின் மனுதாரர்/ வாகனத்தின் உரிமையாளர் என்றும், மேற்படி வழக்கு பற்றிய விபரம் தனக்கு நன்கு தெரியும் என்றும், புகார்தாரர் கூமாபட்டி காவல்

நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், புகார்தாரரின் மகன் 25.05.2026 ம் தேதி திருவில்லிபுத்தூர் முருகன் ஆப்டிக்கல்ஸ் கடைக்கு சென்றவிட்டு கிருஷ்ணன்கோவில் டூ வத்திராயிருப்பு செல்லும் கிழமேல் ரோட்டில் சுந்தரபாண்டியம் விலக்கு அருகே உள்ள G.R மில் முன்பு நின்று கொண்டிருந்த போது மதியம் சுமார் 02.30 மணிக்கு TN 84 S 0301 என்ற Maruthi Eritiga கார் வந்து நின்றதாகவும், அந்த காரிலிருந்து பிரபல ரவுடியான கருத்தபாண்டி அவருடன் இருந்த கார் ஓட்டுநர் மற்றும் இரண்டு நபர்கள் புகார்தாரரின் மகனை வலுக்கட்டாயமாக காரில் ஏற்றி சென்றதாக புகார்தாரர் ஊரைச் சேர்ந்த பொன்ராஜ் என்பவர் புகார்தாரருக்கு போன் செய்ததாகவும், உடனே புகார்தாரர் கிருஷ்ணன்கோவில் நோக்கி வரும் போது புகார்தாரர் மகன் இராமசந்திராபுரம் அருகே வந்து கொண்டிருந்ததாகவும், புகார்தாரர் தனது மகனிடம் கேட்ட போது புகார்தாரரின் கணவர் தரவேண்டி பணத்திற்காக புகார்தாரரின் மகனை கடத்தியதாக புகாரின் பேரில் கிருஷ்ணன்கோவில் காவல் நிலைய வழக்கு எண்.120/2026 பிரிவு 140(2)BNS Act 2023 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி வழக்கில் தனக்கு சொ‌ந்தமான TN 84 S 0301 என்ற Maruthi Eritiga கார் எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டு தற்போது காவல் நிலையத்தில் உள்ளதாகவும், மேற்படி தனக்கு சொந்தமான TN 84 S 0301 என்ற Maruthi Eritiga கார் திறந்த வெளியில் நின்று கொண்டிருப்பதால் வெயிலாலும், மழையாலும் பாதிப்படையக்கூடும் என்றும், மேற்படி தனக்கு சொந்தமான TN 84 S 0301 என்ற Maruthi Eritiga காரை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் பட்சத்தில் நீதிமன்றம் இடும் உத்தரவினை பின்பற்ற தயாராக இருப்பதாகவும், மேற்படி வழக்கிற்கும் தனது TN 84 S 0301 என்ற Maruthi Eritiga காருக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், மேற்படி தனக்கு சொந்தமான TN 84 S 0301 என்ற Maruthi Eritiga காரை நீதிமன்றம் கேட்கும்பொழுது தான் ஒப்படைக்க தயாராக இருப்பதாகவும், மேற்படி தனக்கு சொந்தமான TN 84 S 0301 என்ற Maruthi Eritiga காரை தன்னிடம் ஒப்படைக்கும் பொழுது அதனை மாற்றவோ, விற்கவோ, அடமானமோ செய்ய மாட்டேன் என்றும், மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தம் தனது பெயரில் உள்ளதாகவும், மேற்படி காரின் அசல் ஆர்.சி.புத்தகம் தன்னிடம் தான் உள்ளது என்றும், மேற்படி TN 84 S 0301 என்ற Maruthi Eritiga காரை தன்னிடம் ஒப்படைக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அரசு தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கின் சொத்தை மனுதாரரிடம் திரும்ப கொடுக்கும்பட்சத்தில் அவர் வாகனத்தின் தடயத்தையும் அழித்தும் வானத்தை உருமாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், மேலும் பல குற்றச்செயல்களில் ஈடுபடுத்தக்கூடும் என்பதாலும், வாகனத்தை விற்று விடக்கூடும் என்பதாலும், மேலும் இவ்வழக்கானது நீதிமன்ற கோப்பிற்கு எடுக்க வேண்டி நிலுவையில் இருந்து வருவதாலும், வாகனத்தை வழக்கு விசாரணையின் போது ஆஜர் செய்யாமல் இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது என்று கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில், மனுதாரரின் ஆவணமான ஆதார் அட்டை நகல், ஆர்.சி.புத்தகத்தின் நகல் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. தற்போது நீதிமன்றத்தின் முன்பு எழுந்துள்ள வினா மேற்படியான மனுவை அனுமதிப்பதா வேண்டாமா என்பதே ஆகும்.

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல், TN 84S0301 என்ற பதிவெண் கொண்ட Maruthi Ertica நான்கு சக்கர வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தின் நகல் ஆகியவற்றை பார்க்கையில் மேற்படி நான்குசக்கர வாகனத்திற்கு மனுதாரர் தான் உரிமையாளர் என்பது தெரிய வருகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR.No.255/2026 என கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பில் மனுதாரர் தான் மேற்படி வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பது குறித்து ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை. மேலும் வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகமும் மனுதாரர் வசம் தான் உள்ளது. மனுதாரர் அவரது மனுவுடன் தாக்கல் செய்துள்ள உறுதிக்கூற்றில் வழக்கு சொத்தான TN 84S0301 என்ற பதிவெண் கொண்ட Maruthi Ertica நான்கு சக்கர வாகனத்தை நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆஜர்படுத்துவதாக உறுதி கூறியுள்ளார். வழக்கு சொத்தை உபயோகப்படுத்தப்படாமல் இருந்தால் அதன் பயன்பாடும், மதிப்பும் குறைந்து விட வாய்ப்பும் உள்ளது. மேலும் மாண்பமை உச்ச நீதிமன்றம் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் –எதிர்– குஜராத் மாநிலம் 2002 (10) SCC 283 என்ற வழக்கில் சொல்லியுள்ள கோட்பாட்டினை கருத்திற் கொண்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மேற்படி வாகனத்தை அதன்

உரிமையாளரான மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பு செய்ய உத்தரவிடப்படுகிறது.

1. வழக்கு சொத்துக்கு ஈடாக மனுதாரரும், இரண்டு ஜாமீன்தாரர்களும் தலா ரூ.10,00,000/—க்கு பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2.வழக்கு சொத்தை முழுமையாக காட்டக்கூடிய அனைத்து பரிமானங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட புகைப்படத்தை தாக்கல் செய்ய வேண்டும். அதற்கான பாரதிய சாக்சய அதினியம் பிரிவு 63—ன் கீழான சான்றிதழை தாக்கல் செய்யவேண்டும்.

3. அசல் வழக்கு முடியும் வரை வழக்கு சொத்தை விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ, வேறு வில்லங்க விவகாரத்தில் ஈடுபடுத்தவோ கூடாது.

4. வழக்கு விசாரணையின் போது வழக்கு சொத்தை ஆஜர்படுத்த வேண்டும்.

5. வழக்கு சொத்துக்கு பஞ்சநாமா தயார் செய்து தாக்கல் செய்யப்பட வேண்டும்.

6, வழக்கு சொத்தான TN 84S0301 என்ற பதிவெண் கொண்ட Maruthi Ertica நான்கு சக்கர வாகனத்தின் அசல் R.C புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்

இந்த உத்தரவு என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜீன் திங்கள் 06ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

-Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்.2
திருவில்லிபுத்தூர்.